## மாகாண வீதிகள் செயற்திட்டம் - ஊவா மாகாணம் - 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் உருவாகும் சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத்தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகக் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் படி, மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) நியாயமான முறையில் நம்பகத்தன்மையுடன் காணப்பட்டன என்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுக்கு இணங்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் ஊவா மாகாணம் செலவினம் ரூபா. 1,220,220,663 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,954,781,415 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், 2011 திசெம்பர் 31 வரையான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினத்தின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| செலவின விடயம் | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 786,036,771 | 1,470,661,140 | 2,256,697,911 |
| வீதிப் பராமரிப்பு | 371,665,641 | 111,495,347 | 483,160,988 |
| ஆலோசனை சேவைகள் | 111,029,406 | 135,854,039 | 246,883,445 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1,440,877 | 1,238,298 | 2,679,175 |
| கட்டிட அபிவிருத்தி | 187,884 | 1,579,090 | 1,766,974 |
| அலுவலக உபகரணம் | 3,575,947 | 2,837,774 | 6,413,721 |
| பயிற்சி மற்றும் செயலமர்வு | (294,000) | 394,000 | 100,000 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 18,005,123 | 20,596,980 | 38,602,103 |

| | | | |
|---|---|---|---|
| மீள்மதிப்பும் குறை மதிப்பீடும் க/கு | (71,426,986) | (10,095,916) | (81,522,902) |
| மொத்தம் | 1,220,220,663 | 1,734,560,752 | 2,954,781,415 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறு, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- ஊவா, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- கிழக்கு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் கூறு- வடக்கு மாகாணம் என்றவாறு நான்கு புறம்பான விசேட (டொலர்) கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போதான ஊவா மாகாணத்தின் விசேட (டொலர்) கணக்கிற்கான செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | யூ.எல். டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 6,507,178.52 | 741,176,093 |
| <u>கூட்டுக:</u> | | |
| மீள்நிரப்புகள் | 6,608,901.00 | 870,952,914 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 701,426,986 |
| | 13,116,079.52 | 1,683,555,993 |
| <u>கழி:-</u> | | |
| பற்றுதல்கள் | 9,249,996.49 | 1,191,941,782 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 3,866,083.03 | 491,614,211 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.1 மீளாய்வாண்டு இறுதியளவில் அபிவிருத்தி செய்ய வேண்டிய 05 வீதிகளிற்காக கால நீடிப்பு வழங்கப்பட்டது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா வீதி இல. 04 இன் பௌதீக முன்னேற்றம் 99.4 சதவீதமாக இருந்ததுடன் இந்த வீதியின் முன்னேற்றம் தொடர்பாக 2013 ஏப்ரல் 24 இல் கணக்காய்வுப் பரிசோதனையில் 100 சதவீதமாக இருந்தது. ஊவா வீதி இல. 02 இல் பௌதீக முன்னேற்றம் ஆகக்

குறைந்த நிலையான 34.68 சதவீதமாக இருந்த போதிலும் ஊவா வீதி இல. 01, ஊவா வீதி இல. 03 மற்றும் ஊவா வீதி இல. 05 என்பவற்றில் பௌதீக முன்னேற்றம் கருத்திற் கொள்ளக் கூடிய அளவில் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வீதியின் இலக்கம் | தொடங்கிய திகதி | பூர்த்தியாக்க வேண்டிய திகதி | நீடிப்பு வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | நீடிப்பின் பின்னர் பூர்த்தியாக்க வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | % | % |
| ஊவா 01 | 2010 நவம்பர் 01 | 2013 சனவரி 01 | 272 | 2013 செப்தெம்பர் 30 | 72.99 | 53.66 |
| ஊவா 02 | 2010 நவம்பர் 01 | 2012 நவம்பர் 30 | 127 | 2013 ஏப்ரல் 06 | 34.62 | 42.72 |
| ஊவா 03 | 2010 நவம்பர் 08 | 2012 நவம்பர் 29 | 149 | 2013 மே 28 | 64.69 | 49.60 |
| ஊவா 04 | 2010 நவம்பர் 26 | 2012 திசெம்பர் 01 | 46 | 2013 சனவரி 15 | 99.40 | 77.18 |
| ஊவா 05 | 2010 திசெம்பர் 05 | 2012 திசெம்பர் 30 | 169 | 2013 யூன் 17 | 74.55 | 53.98 |

5.2(அ) கேள்வி ஆவணங்களின் II ஆம் பிரிவின் ஐரீபீ 18.3(ஆ) பிரிவு மற்றும் உடன்படிக்கையின் I ஆம் பிரிவின் 18.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தங்கள் வழங்கல் கேள்வியில் செல்லுபடியாகும் காலம் 56 நாட்கள் தாமதப்பட்டிருக்குமாயின் கேள்வி விலைகளில் தீர்மானிக்கப்பட்ட 6 சதவீத அதிகரிப்பைச் செய்ய வேண்டும். 05 செயற்திட்டங்கள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 17,090,718 தொகையானது பட்டியல்களுக்கு மேலதிகமாகச் செலுத்தவேண்டியேற்பட்டது.

(ஆ) கேள்வி ஆவணத்தின் 14.7 ஆம் பந்தியின் பிரகாரம் பட்டியல் சமர்ப்பிக்கபட்டு 56 நாட்களுக்குள் ஒப்பந்தங்களுக்குரிய கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டிய போதிலும் ஊவா 01 ஆம் இலக்க பொதிகளின் வீதித் தொகுதிகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட

பட்டியல் இல. 23, 24 மற்றும் 25 இற்காக ரூபா 1,564,160 தொகையும், ஊவா 04 ஆம் இலக்க வீதிப் பொதிகளின் பட்டியல் இல. 16 மற்றும் 20 என்பவற்றில் ரூபா 624,936 தொகையும் உள்ளடக்கிய ரூபா 2,189,096 கூட்டுத்தொகையானது ஒப்பந்தகாரர்களினால் தாமதக் கட்டணமாக கோரப்பட்டிருந்தது.

3.3 செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 7 ஆம் இலக்க இணைப்பின் 29 மற்றும் 30 ஆம் இலக்க கூறுகளின் படி, உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் காலாண்டு அறிக்கைகள் உலக வங்கி மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் உப அலுவலகத்திற்கும் அனுப்பப்பட வேண்டும். எனினும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் உரியவாறு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.4 ஊவா- 05 மெடிதல- கிரிவெஹெர வீதி தொடர்பாக 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 27+374 கிமீ என்ற இடத்தில் ரூபா 154,276 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட பக்கச் சுவர் 2012 திசெம்பர் 16 ஆந் திகதி அழிவடைந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 ஏப்ரல் 24 வரையிலும் மீள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 3+390 கிமீ என்ற இடத்தில் ரூபா 3,052,791 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட கோபியன் மதில் 2012 திசெம்பர் 17 ஆந் திகதி விழுந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 ஏப்ரல் 24 வரையிலும் மீள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 16+868 கிமீ , 16+100 கிமீ மற்றும் ஏனைய இனங்காணப்பட்ட இடங்களில் மலையின் மேலதிகப் பகுதிகளை அகற்றியதனால் ஏற்பட்ட மண் மற்றும் கற்களினால் இயற்கையான நீரோட்டம் தடைப்பட்டிருந்தது.

(ஈ) 2+130 கிமீ என்ற இடத்தில் வீதியின் எல்லையில் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டமையினால் வீதியின் அகலம் 3 மீற்றர் ஆக இருந்ததுடன் அது எதிர்கால போக்குவரத்திற்கு இடையூறாகவும்

காணப்பட்டது. எனினும் 2013 ஏப்ரல் 24 வரையிலும் அதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5** ஊவா 04 ஹக்கல – போர்ட் மெக்னொடால்ட் வீதியில் 3+800 கி.மீ. என்ற இடத்தில் மண்சரிவின் காரணமாக 23 மீற்றர் அளவிலான பகுதி கீழிறங்கியிருந்தது.. மேலும் 7+900 - 7+950 கி.மீ. வரையான இடம் கழுவிச் செல்லப்பட்டிருந்தது.

**3.6** ஊவா 01 ஆம் இலக்க கோட்டேகொட – யாலகமுவ வீதியில் 07+370 கி.மீ. மற்றும் 07+540 கி.மீ. இடையிலான பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டின் போது மண்சரிவின் காரணமாக இடர் முகாமைத்துவ அமைச்சின் 2011 பெப்ரவரி 10 ஆந் திகதிய என்பீஆர்ஓ/2011/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் நிபந்தனைகளழன் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபர்ர்சு கிடைக்கும் வரையிலும் இந்த வீதியின் ஒரு பகுதி நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக சிபார்சினை வழங்கமாறு மாகாண செயற்திட்ட உத்தியோகத்தரினால் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் கோரியிருந்த போதிலும் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையிலும் தேவையான சிபார்சுகள் பெறப்பட்டிருக்கவில்லை. வீதியின் நிர்மாண செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது வீதியின் இருமருங்கிலும் தூசுகளைக் காணமுடிந்தது. அதனால் தூசினால் சுற்றாடல் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. சுற்றாடல் முகாமைத்துவ செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு ஒப்பந்தக்காரரினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.